JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//370 / 2009 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | அந்தோணி லெனின் ராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thurssday of 18.03.2025

<u>முதல் விசாரணை (</u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் 299 பிரிவின் கீழ்)

நான் காவல் துறையில் பணியாற்றி சிறப்பு உதவி ஆய்வாளராக தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். எதிரி செல்லதுரை என்பவரை எனக்கு தெரியும் அவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். 30.10.2006 ம் தேதி பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது பாவூர்சத்திர காவல் நிலைய காவல் ஆய்வாளர் ராஜூ, தலைமை காவலர் 1409 மற்றும் 1700 ஆகியோருடன் வடக்கு சிவகாமிபுரத்தில் உள்ள கீழப்பாவூரை சேர்ந்த அர்ஜுனன் என்பவரின் ரைஸ்மில்லுக்கு வடபுறம் கவனித்து கொண்டிருந்த போது ஒரு டேங்கர் லாரியிலிருந்து ஏதோ ஒரு திரவத்தை பிளாஸ்டிக் டியூப் மூலம் பிளாஸ்டிக் பேரலில் பிடித்து கொண்டும் அதன் பிறகு மற்றொரு லாரியிலிருந்து பிளாஸ்டிக் டியூப் மூலம் பிளாஸ்டிக் பேரலில் ஏதோ ஒரு திரவத்தை பிடித்து கொண்டிருந்தார்கள். அந்த டேங்கர் லாரிகளின் பதிவு எண் KA 01D6447 , TN 76 9933 ஆகும். அந்த திரவத்தை எடுத்து விட்டு தண்ணீரை கலக்க வேண்டும் என்று திட்டமிட்டு கொண்டிருந்த நபர்களை பிடித்து விசாரித்த போது கழிவு

ஆயிலை எடுத்து செல்லதுரை என்பரிடம் கொடுப்பதற்காக எடுத்ததாக சொன்னார்கள். விசாரித்து பார்த்தபோது டிரைவர் ஈஸ்வரன், கிளினர் தங்கராஜ் மற்றொரு வண்டியின் டிரைவர் காளிதாஸ், கிளினர் நாராயணன் ஆகியோர் கழிவு ஆயிலை எடுத்து செல்லதுரை என்பவரிடம் விற்பனை செய்து காளிதாஸ்க்கும் , ஈஸ்வரனுக்கும் ரூ.300 வீதம் கொடுத்திருக்கிறார். செல்லதுரையை விசாரித்த போது அந்த ஆயிலை வாங்கி சிவகாசியிலுள்ள ஜோசப் என்பவரிடம் விற்பனை செய்வதாக சொன்னார்கள். டிரைவர் ஈஸ்வரனுக்கு ஏற்கெனவே சிவகாசியை சேர்ந்த ஜோசப் என்பவரை தெரியும் என சொன்னார். தற்போது என்னிடம் காட்டப்படும் தனியறிக்கை அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அந்த அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். இந்த அத்தாட்சி அ.சா ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆயில் மற்றும் பேரல் கைப்பற்றப்பட்ட அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி அ.சா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. செல்லதுரை என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். செல்லதுரை என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் அ.சா. ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஈஸ்வரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். ஈஸ்வரன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் அ.சா. ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காளிதாஸ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். காளிதாஸ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் அ.சா. ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட ஆயிலிருந்து மாதிரி எடுத்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி அ.சா. ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi